செய்தி வெளியீடு எண்: 222/2018 நாள்: 16.04.2018

**14.04.2018 முதல் 05.05.2018 வரை நடைபெறவுள்ள கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தில் வேலூர் மாவட்டத்தில் அனைத்துத் துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.ஜெயசீலன், I.D.A.S, அவர்கள் மற்றும் இந்திய அரசின் கால்நடைத் துறை துணைச் செயலாளர் திரு.தீபக்சீதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 14.04.2018 முதல் 05.05.2018 வரை நடைபெறவுள்ள கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தில் வேலூர் மாவட்டத்தில் அனைத்துத் துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.ஜெயசீலன், I.D.A.S, அவர்கள் மற்றும் இந்திய அரசின் கால்நடைத் துறை துணைச் செயலாளர் திரு.தீபக்சீதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இக்கூட்டத்தில் மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் திரு.டி.ஜெயசீலன், I.D.A.S, அவர்கள் பேசியதாவது:

இந்திய அரசு செயல்படுத்தி வரும் அனைத்து திட்டங்களும் கடைகோடி மக்களுக்கும் சென்றடைந்து பொதுமக்கள் பயன்பெற்றிருக்க வேண்டும் என்பதே அரசின் முக்கிய நோக்கமாகும். இதில் எவ்வித இடர்பாடுகளும் குறைகளும் இருக்கக் கூடாது. அதனடிப்படையில் இந்தியா முழுவதும் இத்திட்டங்கள் சென்றடைந்துள்ளதா என்பதை ஆய்வு செய்ய கிராம சுவராஜ் அபியான் இயக்க திட்டம் 14.04.2018 முதல் 05.05.2018 வரை நடைபெறுகிறது. இதில் இந்திய அரசு பணியாளர்கள் ஒவ்வொரு மாவட்டம் தோறும் 2 அரசுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவற்றில் உள்ள குறைகள் நிறைகள் கண்டறிந்து இந்த முகாம் நாட்களுக்குள் அனைத்து திட்டங்களும் பொதுமக்களுக்கு கிடைத்திட வழிவகைகள் செய்யப்படும். ஆகவே அனைத்துத் துறை அலுவலர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் முறையாக தங்கள் துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் கிடைத்திடவும் அவற்றை பெற பொதுமக்களிடையே போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தி பல்வேறு நிகழ்வுகளை நடத்திட அனைத்துத் துறை அலுவலர்களின் ஒத்துழைப்பு நல்கி தமிழகத்தில் அனைத்துத் திட்டங்களை செயல்படுத்துவதில் வேலூர் மாவட்டத்தினை முன்னிலை மாவட்டமாக நிலைநாட்டிட பணிகளை சிறப்புடன் செய்திடுமாறு மத்திய அரசின் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

வேலூர் மாவட்டத்தில் பின்தங்கிய ஊராட்சிகளாக கண்டறியப்பட்டுள்ள 74 ஊராட்சிகளில் 14.04.2018 முதல் 05.05.2018 வரை நடைபெறவுள்ள கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தில் அனைத்து துறைகளும் இணைந்து மத்திய அரசின் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்துவதில் விடுபட்டுள்ள குடும்பங்களை கண்டறிந்து அவர்கள் முழுமையாக பயனடையும் வகையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிராம சுவராஜ் அபியான் திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புற ஊராட்சிகளில் மக்களிடையே சமூக ஒற்றுமை, அரசின் திட்டங்களை ஏழை கிராமப்புற வீடுகளுக்கு கொண்டு செல்லுதல், ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பயன்பாடு குறித்த விவரம், புதிய யுத்திகளை கையாளுதல், விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பாக்குதல், கிராமப்புறங்களில் வாழ்வாதார உரிமைகளை மேம்படுத்துதல், மற்றும் தூய்மையான மற்றும் வலிமையான பஞ்சாயத்துகள் ஏற்படுத்துதல் போன்றவைகளாகும்.

மேற்குறிப்பிட்ட பணிகளை அனைத்துத் துறை அலுவலர்களும் இணைந்து அந்தந்த ஊராட்சிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கொண்டு சேர்த்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதை தவிர, இந்த கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தில் மத்திய அரசின் திட்டங்களான ஏழை எளிய மக்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் உஜ்வாலா திட்டம், அனைத்து வீடுகளுக்கும் எல்.ஈ.டி.பல்பு வழங்கும் உஜ்ஜாலா திட்டம், அனைத்து வீடுகளுக்கும் இலவச மின் இணைப்பு வழங்கும் சௌபாக்கியா திட்டம், பிரதம மந்திரியின் அனைவருக்கும் வங்கி சேவை வழங்கும் திட்டம், பிரதம மந்திரியின் ஆயுள் காப்பீட்டு திட்டம், பிரதம மந்திரியின் விபத்து காப்பீட்டு திட்டம், மிஷன் இந்திரதனுஷ் தடுப்பூசி வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களால் அனைத்து மக்களும் பயனடைந்து உள்ளனரா, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் எத்தனை மக்கள் பயனடைந்துள்ளனர், விடுபட்டவர்களை கண்டறிந்து அவர்களையும் இத்திட்டங்களில் இணைத்து பயனடைய செய்வதே இதன் நோக்கமாகும். அதனடிப்படையில் இந்த கிராம சுவராஜ் அபியான் இயக்க காலத்தில் வேலூர் மாவட்டத்தில் 14.04.2018 அன்று பாபாசாஹிப் Dr.B.R.அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளிற்காக சமூக நீதி நாள் அனுசரிக்கப்பட்டது.

18.04.2018 அன்று தூய்மை பாரத இந்தியா நாளாக (சுவட்ச் பாரத் திவாஸ்) கொண்டாடப்பட வேண்டும். இந்நாளில் திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கமற்ற ஊராட்சிகள் என அறிவிக்கப்படாத ஊராட்சிகளில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பணிமேற்பார்வையாளர்கள், ஊக்குவிப்பாளர்கள், ஊராட்சி செயலர்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆகியோர்கள் ஒருங்கிணைந்து முழு அளவிலான தூய்மைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவ்வூராட்சிகளை திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கமற்ற ஊராட்சிகளாக அறிவிக்க தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்வார்கள்.

20.04.2018 அன்று (உஜ்வாலா திவாஸ்) பிரதம மந்திரி சமையல் எரிவாயு திட்டத்தின் கீழ் உரிய பயனாளிகளை தெரிவு செய்து அவர்களுக்கு சமையல் எரிவாயு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அந்நிகழ்வின்போது சமையல் எரிவாயுவினை பாதுகாப்பாக பயன்படுத்தும் முறை குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டும்.

24.04.2018 அன்று தேசிய பஞ்சாயத்து நாளாக (ராஷ்ட்ரிய பஞ்சாயத்து ராஜ் திவாஸ்) அனுசரிக்க வேண்டும். அன்றை தினத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடத்த வேண்டும். அக்கிராமசபைக் கூட்டத்தில் ஊராட்சி அளவிலான பொருளாதார வளர்ச்சி குறித்தான கிராம வளர்ச்சி திட்டம் (Village panchayat Development plan) ஊராட்சி நிதியினை சரியான முறையில் பயன்படுத்துதல். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதாரத்தினை உறுதி செய்தல். ஊராட்சியின் முன்னேற்றத்தில் மகளிரின் பங்கு. அரசு செயல்படுத்திய மிகப்பெரிய திட்டங்கள் குறித்தான தகவல். ஊராட்சியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்களின் பங்களிப்பினை அங்கீகரித்தல். இக்கிராம சபைக் கூட்டத்தில் முதியோர்களுக்கு உதவியாக இருத்தல், நெகிழி (Plastic) பயன்படுத்தாமல் இருத்தல், சேவைகளை கணினி மயமாக்குதல், அன்ன அந்த்யோதயா யோஜனா திட்டத்தில் விடுபட்டவர்களை இணைத்தல் போன்றவை தொடர்பான தீர்மானங்களை இயற்றப்படும்.

28.04.2018 அன்று கிராம சக்தி அபியான் நாளாக (கிராம சுவராஜ் திவாஸ்) அனுசரிக்கப்பட வேண்டும். மாவட்ட அளவில் பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா (கிராமின்), பிரதம மந்திரி சௌபாக்யா யோஜனா போன்ற அரசு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள் மூலம் மற்றவர்களிடம் திட்டத்தின் தேவையை உணர்த்தப்படும்.

30.04.2018 அன்று தேசிய மருத்துவ காப்பீட்டுத் திட்ட நாளாக (ஆயுஷ்மான் பாரத் திவாஸ்) அனுசரிக்கப்பட வேண்டும். அன்றைய தினத்தில் சுகாதாரம் மற்றும்குடும்ப நலத்துறை அலுவலர்களைக் கொண்டு மருத்து காப்பீடு/ஆயுஷ் மான் பாரத் யோஜனா தொடர்பாக விளக்கக் கூட்டங்கள் நடத்துதல்.மேலும் உரிய பயனாளிகள் குறித்தான விபரங்கள் சேகரிக்கப்படும்.

02.05.2018 அன்று விவசாய நல நாளாக (கிஷான் கல்யாண் திவாஸ்) அனுசரிக்கப்பட வேண்டும் அன்றைய தினத்தில் வேளாண்மைத் துறை / தோட்டக்கலை அலுவலர்களைக் கொண்டு வட்டார அளவில் விவசாயிகளின் வருமானத்தினை இரட்டிப்பாக்குதல் தொடர்பாக விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடத்தப்படும்.

05.05.2018 அன்று திறன் வளர்ப்பு பயிற்சி திட்ட (ஆஜிவிகா மற்றும் கௌஷல் விகாஸ் மேளா) நாளாக அனுசரிக்கப்பட வேண்டும். அன்றைய தினத்தில் மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலர்களைக் கொண்டு மாவட்ட அல்லது வட்டார அளவில் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், சமுதாய வளப் பயிற்றுநர்கள், வங்கியாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவன உறுப்பினர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் மற்றும் வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்பட வேண்டும்.

இதற்கான மேற்கண்ட நிகழ்வுகள் அனைத்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் வாயிலாக சிறப்பான முறையில் நடைபெறுவதற்குரிய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுடன், ஒவ்வொரு நிகழ்ச்சியும் முடிவுற்றதும் உரிய முறையில் ஆவணப்படுத்துவதற்கும், இணைய தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் முக்கிய நிகழ்வுகளை நாளிதழ்களில் பிரசுரம் செய்வதற்கும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளபடும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.தா.செங்கோட்டையன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பெரியசாமி மற்றும் அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
வேலூர்.